OS: 509/2018

Date: 09.03.2022

பெயர் : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்**

எனக்கு தமிழ் தெரியும், ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. நான் 1957ம் ஆண்டு பிறந்தேன், தேதி மாதம் தெரியாது. 1957ம் ஆண்டிற்கு முன்பு நடைபெற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. நான் அச்சு தொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு ஆதியில் மேட்டூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு தாக்கல் செய்தபோது வழக்கின் விவரம் பற்றி தெரியாது. பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரமும் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட விவரம் தெரியும் ஆனால் அறிக்கை விவரம் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு இந்து சமய அறநிலையத்துறையில் அனுமதி எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இவ்வழக்கு தொடர அனுமதி பெறப்பட்டதா இல்லை என்று தெரியாது. இந்த வழக்கு தொடர்பவது தொடர்பாக அறநிலையத் துறையில் தீர்மானம் எதுவும் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது, ஆனால் வழக்கறிஞர் யார் என்று முடிவு செய்யப்படவில்லை. அவ்வாறு தீர்மானம் எதுவும் ஏற்படவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஓமலூர் நீதிமன்றத்தில் வழக்கு மாற்றம் செய்யப்பட்ட பிறகு தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை விவரம் பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு பிரதிவாதிகள் என்ன ஆட்சேபனைகள் தெரிவித்தனர் என்ற விவரம் தெரியாது. இந்நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த கூடுதல் எதிர்வழக்குரை விவரங்கள் தெரியாது. முதலில் வழக்கு தாக்கல் செய்தபோது ஒரு P.N.கிருஷ்ணமூர்த்தி என்பவர் trustee ஆக காண்பித்து வழக்கு தொடரப்பட்டது என்றால் சரிதான். P.N.கிருஷ்ணமூர்த்தி வழக்கிலிருந்து நீக்கறவு செய்யப்பட்டது தொடர்பாப தீர்மானம் தாக்கல் சயெ்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தீர்மானம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கோவில் தேவாங்கசெட்டியார் கன்னட தெலுங்கு இனத்தை சார்ந்தவர்களுக்கு உரியது. கன்னடதெலுங்கு செட்டியார்

உள்ளூரில் சுமார் 250 குடும்பங்கள் உள்ளது, வெளியூர் குடும்பங்களுக்கு எண்ணிக்கை தெரியவில்லை. உள்ளூர் வெளியூர் சேர்ந்து சுமார் 700 குடும்பங்கள் உள்ளது என்றால் எனக்கு கணக்கு தெரியாது. வாதி டிரஸ்டில் சுமார் 1500 உறுப்பினர்கள் இருப்பார்கள் என்றால் இல்லை, சுமார் 700-800 உறுப்பினர்கள் இருப்பார்கள்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/PW1

ஒப்பம்/ திரு.அஷ்பக் அகமது,
சார்பு நீதிபதி, ஓமலூர்.